தொகுதி 7 எண் 1
Vol. 7 No. 1

**Chief Editor**
*Dr. M. Sadik Batcha*

**Advisory Editor**
*Dr. N. Chandra Segaran*

**Editorial Board**
*Dr. MAM. Rameez*
*Dr. R. Jeya Raman*
*Dr. M. Pandi*
*Dr. Aranga. Pari*
*Dr. A. Ra. Sivakumaran*
*Dr. A. Syed Zakir Hasan*
*Dr. Kumar*
*Dr. S. Easwaran*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. G. Veeramani*
*Dr. K. Narmatha*
*Dr. S. Balasubramanian*
*Dr. K. Vasudevan*
*Dr. F. Selvakumaran*
*Dr. T. Vishnu Kumaran*
*Dr. S. Rajendran*
*Dr. B. Sathiyamoorthy*
*Dr. Govindaraj*
*Dr. Kumara Selva*
*Dr. Senthil Prakash*
*Dr. R. Kurinchiventhan*
*Dr. Sr. Jeusin Francis*
*Dr. R. Rajalakshmi*
*Dr. R. Malarvizhi Mangayarkarasi*
*Dr. P. Ibrahim*
*Dr. K. Sirajudeen*
*Dr. T. Jegathesan*
*Dr. Pon. Kathiresan*
*Dr. M.H. Jahanara*
*Anbu Jaya*
*Mr. K. Saravanan*

மார்கழி-பங்குனி 2050
January - March 2019

ISSN : 2321 - 984X

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்
UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL
UGC Journal No.40720

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)*
*(கலை & மனிதவியல்)*

# Journal of Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*
*(Arts & Humanities)*

**Published by**
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-1
Part -1

# பண்டையத் தமிழரின் மருத்துவ அறிவு

முனைவர் த.கீதாஞ்சலி
தமிழ் உதவிப்பேராசிரியர், என்.ஜி.எம் கல்லூரி,
பாள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா.

உலக உயிரினங்கள் எல்லாவற்றிற்கும் இன்ப துன்பம் என்பது இயல்பாக வரக்கூடியது. இன்பம் விழையின் மனம் மகிழும். துன்பம் நேரின் வருந்தும். உயிரினங்களை வருத்துகின்ற துன்பத்தைத் தரும் நோயைப் போக்குவது மருந்தாகும். நோய் நீக்கும் செயலைக் குறிப்பது மருத்துவம் ஆகும். அச்செயலைச் செய்பவன் மருத்துவன் ஆவான். மருத்துவம் ஆயக்கலைகள் அறுபத்து நான்கனுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

சங்ககாலத்தில் மருத்துவ அறிஞர் பலர் வாழ்ந்திருந்தனர். அவர்களுள் சிலர் சிறந்த இலக்கியச் செல்வர்களாகவும் திகழ்ந்தனர் என்பதற்கு மருத்துவர் தாமோதரனார் என்னும் புலவரே சான்று. மேலும் அசோகரால் நிறுவப்பட்ட மருத்துவமனைகள் தமிழகத்தில் இருந்தன என்பதற்கு அவருடைய கல்வெட்டுகளே சான்றுகளாகின்றன. மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும் மருத்துவமனைகள் அவரால் நிறுவப்பட்டன.

பண்டைத் தமிழர்கள் துன்பம் தரும் எதனையும் நோய் என்றனர். மனிதனை நொய்மைப் படுத்துவதால் நோய் எனப் பெயர் வந்தது. பசி, நீர் வேட்கையைக் கூடத் தமிழர்கள் நோய் என்றனர். கோவூர்கிழார் நீரையும் உணவையும் 'இருமருந்து' என்கிறார். பசிப்பிணியைப் போக்க முன்வந்த வள்ளல்கள் பசிப்பிணி மருத்துவர் எனப் பாராட்டப்பட்டனர். சோழன் நலங்கிள்ளி தன்நாட்டு வள்ளல் பெருமகன் பண்ணனைப் பாராட்டும் வகையில் "பசிப்பிணி மருத்துவன் இல்லம் அணித்தோ சேய்த்தோ கூறுமின்" (புறம்:173) என்கிறார்.

## மருத்துவம்

மருத்துவம் என்பதற்கு வைத்தியம், மருந்து, பரிகாரம் என்று தமிழ் அகரமுதலி (ப.853) விளக்கம் தருகிறது. மருத்துவத்தைச் 'சிகிச்சம்' என்றும், மருத்துவமனையைச் 'சிகிச்சன்' என்றும் தமிழ் ஆங்கில அகராதி (ப.2054) விளக்குகிறது. எனவே மருத்துவம் என்பது மனிதனின் உடல் , மனம், உயிர் ஆகிய பல்வேறு கூறுகளையும் அவற்றின் நிலைமைகளையும் ஆராய்ந்திடும் ஒரு தூய்மையான அறிவியல் எனலாம்.

போர்க்களம் சென்று விழுப்புண்பட்டு, புண்ணின் வலியுடன் வீடு திரும்பும் வீரனுக்கு மருத்துவம் பார்க்கும் மருத்துவராக மனைப்பெண்டிர் இருந்துள்ளனர். மருத்துவம் பார்க்கும் ஆணை 'மருத்துவர்' என்றும், பெண்பாலரை 'மருத்துவி' என்றும் அழைக்கும் வழக்கம் இருந்துள்ளது என்பதை 'ஆருயிர் மருத்துவி' என்று மணிமேகலை(17:15) காட்டுகிறது. எனவே ஆண், பெண் இருபாலரும் மருத்துவக்கல்வி உடையவர்களாக இருந்துள்ளனர்.

## மருத்துவன் பற்றி

மருத்துவன் தரும் மருந்தானது உடலுள்சென்று நோய் போக்கி மகிழ்வைத் தருவது போல எனவரும்.

"திருந்திய யாக்கையுள் மருத்துவன்
ஊட்டிய
மருந்து போல்" (பாலைக்கலி.16)



Scanned with CamScanner

என்ற கலித்தொகைப் பாடல் மருத்துவன் தரும் மருந்து துன்பத்தை நீக்கும் என்ற கருத்தைத் தெளிவுபடுத்துகிறது.

**மருத்துவன் கடமை**

தனக்கு உற்ற நோயை நீக்குமாறு மருத்துவனிடம் நோயாளி வேண்டிக் கேட்டுக் கொண்ட பின்னும் மருத்துவன் நோயாளிக்கு மருந்து அளிக்காவிட்டால் அது கொடுமை என்று நெய்தல் கலி,

"....திறனறி ஒருவன்
மருந்து அறை கோடலின் கொடிதே"
(12:24-25)

என்று உரைக்கிறது.

நோயாளிக்கு வந்த நோய் அறிந்து அதற்கு ஏற்ற மருந்து தருவது மருத்துவனின் கடமையும் அறமும் ஆகும். நோயாளி விரும்புவதையெல்லாம் தருவது மருத்துவத் தருமம் அன்று என்ற கருத்தைக் கூறி நோயாற்றுகின்ற மருத்துவனைப் போற்றி நற்றிணை அவனை 'அறவோன்' என்கிறது.

"அரும்பிணி உறுநர்க்கு வேட்டது
கொடாஅது
மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன்
போல" (136:23)

என்ற நீங்காத நோயையும் நீக்கும் மருத்துவனை அறவாளன் என்கிறது. இதிலிருந்து மருத்துவனின் மேன்மை புலப்படுகிறது.

**மருந்து- வரையறை**

பழந்தமிழ்ப்புலவர்கள் ஒரு நல்ல மருந்தின் பண்புகளையும் தங்களின் மருத்துவப் புலமையையும் தங்கள் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர். நோயாளியின் துன்பத்தையும் வேதனையையும் போக்குவது மருந்து என்பதை நற்றிணை, "அருந்துயர் அவலம் தீர்க்கும் மருந்து" (பா.140) என்கிறது. "அருந்துயர் ஆரமர் தீர்க்கும் மருந்து" (கலித். 8) என்றும், உயிரைக் காக்கும் பொருளாக மருந்தை வரையறுத்துள்ளதை, "இன்னுயிர் செய்யும் மருந்து" (கலித்.31) என்றும் கலித்தொகை உரைக்கிறது.

**மருந்தின் இலக்கணம்:**

சங்க இலக்கியத்தில் மருந்து பற்றியும், மருத்துவப் பொருட்கள் பற்றியும் குறிப்புக்கள் உள்ளன. அதைக் கொண்டு நல்ல மருந்திற்குரிய இலக்கணத்தை வரையறுக்கலாம்.

மருந்து என்பதை மரு+உந்து எனப் பிரித்து மருந்து உட்கொள்வதன் மூலமாக உயிர் உந்தப்பட்டு மரு ஆகிய குற்றம் நீங்குவது எனப்பொருள் கொள்வர். ஒருவருடைய நோயைத் தீர்க்க மருத்துவனால் கையாளப்படும் பரிகாரமே மருந்தாகும். 'மருந்து' என்ற சொல் 'மருத்து' என வலித்தல் விகாரம் பெற்று மருத்துவத் தொழிலை உணர்த்திற்று.

மருந்து என்ற சொல் 'மரு' என்ற வேரின் அடிப்படையாகப் பிறந்திருக்க வேண்டும். மரு என்றால் மலைவாசனை, மருக்கொழுந்து, இளம் தளிர் என்று பொருள்படும். மலைக்காடுகளில் கிட்டும் வெவ்வேறான மணமும் குணங்களும் கொண்ட மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருள்கள் நோய்க்கு எதிராகச் செயல்படுவதால் இதை மருந்து என வழங்கி இருக்கலாம் என்பது உரையாசிரியர்கள் தரும் விளக்கமாகும்.

முதலில் மருந்தானது நோயைத் தடுத்து உயிரைக் காக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இதைக் கலித்தொகை,

"இன்னுயிர் செய்யும் மருந்து"(கலி.32)

என்று குறிக்கிறது. எனவே மருந்தானது நோயைக் கட்டுப்படுத்தி நோயாளியின் உயிருக்குத் தீங்குநேராதபடி அவன் உயிரைக் காக்கவேண்டும்.



Scanned with CamScanner

மேலும் மருந்தானது பொறுக்க முடியாத வருத்தத்தைப் (வலி) போக்கக் கூடியதாக இருக்கவேண்டும். துன்பம் என்பது உடல், உள்ளம் இரண்டையும் குறிக்கும். இதைக் கலித்தொகை, "அருந் துயர் ஆரஞர் தீர்க்கும் மருந்து" (கலி.8) என்கிறது.

அடுத்து மருந்தானது உடலில் உண்டாகும் நோயை உடனுக்குடன் தீர்த்து நோயுற்றவனை நலம்பெறச் செய்ய வேண்டும். உடலில் அளவோடு பொருந்தி, பின்விளைவுகள் (side effect) இல்லாததாகி நோயை விரைவாகத் தீர்க்கும் மருந்தாக இருக்க வேண்டும் என்பதைக் கலித்தொகை,

"இடும்பை தணிக்கும் மருந்து" கலி23) என்கிறது. இறுதியாக உடல் நோயால் ஏற்படும் இழிவு, வெறுப்பு ஆகியவற்றைத் தீர்க்கவல்லதாகவும் இருக்க வேண்டும் என்பதை நற்றிணை,

"அருந்துயர் அவலம் தீர்க்கும் மருந்து" *(140:9-10)*

என்று கூறுகிறது.

**மருந்தும் பாதுகாப்பும்**

பண்டை நாளில் மரங்கள், அதன் பட்டைகள், இலைகள், பூ, காய்கள் மருந்தாகப் பயன்பட்டன. இவ்வாறு மருந்து தரும் மரங்களை எதிர்காலத்தின் பயன்கருதிப் பாதுகாக்க வேண்டும் என்ற சமூகச் சிந்தனை பழந்தமிழ் மக்களிடையே பரவலாகக் காணப்பட்டது. அதனால் மருந்தாகும் மரங்களை மருந்து எடுக்க மீண்டும் அவை தளிர்த்து வளரும் விதத்தில் பாதுகாத்து வந்தனர் என்பதை நற்றிணை,

"மரஞ்சா மருந்தும் கொள்ளார் மாந்தர்
உரஞ்சாச் செய்யார்.." *(226:1-2)*

என்று காட்டுகிறது. மரம் பட்டுப்போகும் அளவிற்கு அவர்கள் மரத்திலிருந்து மருந் தெடுப்பதில்லை என்பதை அறியமுடிகிறது. சங்ககாலத்தில் கள் என்பது உணவாகப் பயன்பட்டது. அதற்குக் 'தொண்டி' என்று பெயர். சோர்வு நீங்கி புத்துணர்வு பெறக் கள்ளை உண்டனர். கள் உடலில் வெப்பத்தை உண்டு பண்ணும் என்பதைப் புறநானூறு,

"வெப்புடைய மட்டு உண்டு" *(24:5)*

என்று குறிக்கிறது. கள் உண்டதனால் நா குழறி குழந்தைகள் பேசும் மழலைபோலப் பேசுவர். கள்ளை நெடுங்காலம் உண்டவர்கள் செருக்காளர் எனப்பட்டனர். ஆங்கில மருத்துவத்தில் 'Chromic Addicts' என்பர். கள்ளுண்டவர் வெறியைப் போக்க மாற்று மருந்தாக 'இஞ்சியை'ப் பயன்படுத்தினர். அதனுடன் மலர்ந்த பூவை முகர்ந்தனர். கள் உண்பதால் உரை மாறுதல், கண் சிவத்தல், நடைமாறுதல், மெய் விதிர்த்தல் முதலிய குறி குணங்கள் ஏற்படும் என்பதை அன்றைய மருத்துவர்கள் அறிந்திருந்தனர்.

**தீப்புண்**

தீயால் சுட்ட புண் பற்றிய குறிப்பு வருகிறது. தீயினால் உண்டாகும் புண்ணைக் காட்டிலும் காமநோய் மிகவும் கொடியது. ஏனெனில் தீப்பட்ட இடத்தில் தாங்க முடியாத எரிச்சல் ஏற்படும். இதனைக் கலித்தொகை,

"மின் ஆயிழை தீயினும் கொடிது அவர்
சாயலின் கனலும் நோய்"(147)

என்றுரைக்கிறது.

**உதட்டுப்புண்**

முன்பனிக்காலத்தில் உதடுகள் வெடித்து புண் உண்டாகும். இதை அற்சிரம் என்பர். அற்சிரம் என்பது முன்பனிக்காலம் என்றும் பொருள்படும். அக்காலத்தில் உதடுகளில் உண்டாகும் புண்ணை அற்சிரம் என்றனர்.



Scanned with CamScanner

பூர்த்தி செய்து கொண்டதுடன், ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் தேவையான மருத்துவ முறைகளையும் சிறப்புறக் கையாண்டுள்ளனர். மருத்துவத்துறை இன்று உலகத்தையே திரும்பிப் பார்க்க வைக்கிறது என்றாலும் அத்துறைக்கும் சவாலான சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. எவ்வளவுதான் மருத்துவம் முன்னேறினாலும் இன்றும் நோயினால் ஏற்படும் உயிர் இழப்புக்களை யாராலும் தடுக்க இயலவில்லை. ஆனால் எத்தகைய அறிவியல் வளர்ச்சியும் இல்லாத பழங்காலத்தில் மக்கள் தமது அரிய முயற்சியால், நோயிலிருந்து சமுதாயத்தைக் காத்து வந்துள்ளமைக்கு ஆதாரமாக இன்றைய இலக்கியங்கள் விளங்குகின்றன. பண்டைத் தமிழர்கள் மருத்துவத்தைத் தனியே போற்றாமல் அவற்றை வாழ்வியலோடு இணைத்தே வளர்த்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக உணரமுடிகிறது.

ௐ



Scanned with CamScanner

தொகுதி-7 எண் 1
Vol. 7 No. 1
மார்கழி-பங்குனி 2050
January - March 2019
ISSN : 2321 - 984X

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.பரத்குமார் | இசுலாமிய புலவர்களும், சிற்றிலக்கியங்களும் | 1-5 |
| 2. | அ.ஞானவேல் | நாட்டுப்புற விடுதைகள் போடப்படும் காலமும் இடமும் | 6-8 |
| 3. | இரா.ஜோஸ்லி & S. பாலின் செல்வஷோபா | வாணம்பாடிகளும் மார்க்சியமும் | 9-13 |
| 4. | க.அ.அன்னையப்பன் | தொண்டைநாட்டு ஆடை வகைகள் | 14-21 |
| 5. | R.GNANASEKARAN | RATIONALISM IN FRANCIS NICHOLAS CHELLIAH'S ESSAY *MORALS IN THE INDIAN CONTEXT* | 22-26 |
| 6. | N. GAFOORDEEN | நூல் ஆய்வு: சீஆ கோட்பாடுகள் ஒரு பகுப்பாய்வு | 27-34 |
| 7. | S. KANNAN | HISTORY OF EDUCATIONAL BACKGROUND OF VIRUDHUNAGAR DISTRICT | 35-41 |
| 8. | X. STELLA MARY & K. VISWA SAROJINI DEVI | A STUDY ON CUSTOMERS SATISFACTION: WITH SPECIAL REFERENCE TO MOBILE NETWORK USERS IN TIRUNELVELI DISTRICT | 42-49 |
| 9. | இரா.அலெக்ஸாண்டர் | மேலாண்மை பொன்னுசாமியின் புதினங்களில் மனிதநேயம் | 50-54 |
| 10. | ப.சித்ரா | அறக்கட்டமைப்பில் கல்வி | 55-60 |
| 11. | க.பால்ராஜ் | பொன்னீலனின் மறுபக்க நாவலில் தீண்டாமை | 61-65 |
| 12. | வ.கணபதிராமன் | கண்ணதாசன் திரையிசைப்பாடல்களில் வாழ்வியல் செய்திகள் | 66-68 |
| 13. | சகோ. பி.ரெஜினா | எட்டுத்தொகை நூல்களில் தீ | 69-78 |
| 14. | ச. ஈஸ்வரன் | இலக்கணம் கற்பித்தலில் எளிய உய்த்துணர் முறைகள் | 79-82 |
| 15. | PULENTHIRAN NESAN | பிளேட்டோவின் குடியரசு நூலில் பிரதானப்படுத்தப்படும் 'அரசும் சமூகமும்' ஓர் நடைமுறை மெய்யியல் நோக்கு | 83-94 |
| 16. | G. PRABHU | INTELLECTUAL PROPERTY RIGHTS: SIGNIFICANCE OF PATENTS AND EFFICIENCY | ...-102 |
| 17. | P. SIVABHARATHIRAJA | PERFORMANCE OF STUDENTS IN HIGHER EDU... ION THROUGH E-...RNING | ...3-110 |
| 18. | ச. அருள் ஜோஸ்பின் | சங்க இலக்கியம் காட்டும் நுண்கலைகள் | ...-115 |
| 19. | MANOHARAN.S | ASTANGA YOGA OF PATHANJALI AND THIRUMULAR - A ST... WHICH UNDERLIE PHENOMENA | 1... 133 |
| 20. | பெ.கலியமூர்த்தி | சோதிடவியலில் - ஐந்... ...ம் - குறிப்பிடு... முன்... ...னப்பய பற்றிய கருத்தாக்கம் | 134-... |
| 21. | ந.ரேகா | பாண்டிய மன்ன... பெருமை... ம் சிற... ...ம் | 145-148 |
| 22. | கு. உத்தமன் | எட்டாம் திருமுறை ... - சிவ... ...ர் தோ... ...ப் பொலிவு. | 149-153 |
| 23. | வே.அகிலா | தமிழில் இசுலாமிய ...ாட்டு... ...ு இலக்க... ...ங்கள் | 154-157 |
| 24. | சுப.லதா | வண்ணச்சரபம் தண்... ...ா சுவாமிகளின் ...ன்றக்குடி கலம்பகத்தின் அமைப்பும் சிறப்பும் | 158-160 |
| 25. | G. KARTHICK & P... ...WARAN | ... RELICS IN KRIS... ...GIRI DISTRICT | 161-165 |
| ... | ந. பாலசு... ...ன் | ...குறுநூற்றில் இளை... ...யர்கள் | 166-170 |
| 27. | ...ர்.அனித | பெரியாரின் பார்வையி... குட்டி ரேவதியின் பெண்கள் | 171-175 |
| 28. | ...கரோ... | இதழிய... | 176-180 |
| 29. | ...VAS... ...HI @ SUBHA | ...AKAP... NEDUNKUZHAIKATHAR TEMPLE IN THENTHIRUPERAI - A STUDY | 181-183 |
| 30. | S... ...OL... | ...TYLE OF PARATHAVARS IN PUNNAIKAYAL A STUDY | 184-189 |
| 31. | P. ...UTHUL... | KOTTAI PILLAIMAR IN SRIVVAIKUNTAM PAST AND PRESENT | 190-193 |
| 32. | D. ... ...HA & M. VI... | AWARENESS AND UTILIZATION OF GOVERNMENT SCHEMES FOR THE PROMOTION OF HIGHER EDUCATION AMONG WOMEN | 194-201 |
| 33. | K. KA... ...LAKSHMI | SOCIAL STATUS OF FISHERMAN IN THOOTHUKUDI - A STUDY | 202-208 |
| 34. | M. ...ANKAR | SOCIAL STATUS OF WOMEN IN TAMILNADU - A STUDY | 209-213 |
| 35. | அ. மகாலெட்சுமி | புலம் பெயர்ந்த தமிழர்களின் தற்காலத் தமிழ் இலக்கியப் போக்கு இந்திய இலக்கியச் சிற்பி அ. மாதவையா | 214-217 |
| 36. | பா. தங்கமணி & இரா. சிவகுமார் | வள்ளலாரின் ஒருமை உள்ளம் | 218-222 |
| 37. | அ. தௌ...பீக் ரமீஸ் | புளுமின் வகைப்பாட்டியலும் தமிழிலக்கியக் கல்விச் சிந்தனைகளும் | 223-238 |
| 38. | அ. இராஜேஷ் | சேக்கிழார் காட்டும் தொழில் மாந்தர்கள் | 239-242 |
| 39. | வ. அண்ணாதுரை | அறிஞர் அண்ணாவின் நாடகங்களில் அறவியலும், அழகியலும் | 243-248 |
| 40. | இல.பிரவீன் பீற்றர் - ஞானையா | நந்திக் கலம்பகத்தில் கைக்கிளை | 249-252 |
| 41. | ர.மங்கையர்க்கரசி | சங்க இலக்கியத்தில் திணைகளின் வழி தழையாடை பெறும் சிறப்பிடம் | 253-258 |
| 42. | ஆ.மலர்விழி & இரா. சுப்பிரமணி | இந்திய வரலாற்றில் தாய்வழி சிந்தனை மரபும் தந்தை பெரியாரும் | 259-282 |
| 43. | மா.தமிழ்ச்செல்வி | நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இலக்கிய வகைமைகள் | 283-287 |
| 44. | இரா.ரேணுகாதேவி | நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் உரைத்திறன் | 288-291 |
| 45. | கு. சீனிவாசன் | புறநானூற்றில் போர் | 292-297 |
| 46. | த. கீதாஞ்சலி | பண்டையத் தமிழரின் மருத்துவ அறிவு | 298-302 |
| 47. | R. SARANYA & N. MAHESWARI | TEACHING AND LEARNING OF WORD ELEMENTS IN ENGLISH: A LINGUISTIC APPROACH | 303-308 |
| 48. | ச. சுடர்கொடி | புதுச்சேரியில் நீர்மேலாண்மை | 309-312 |
| 49. | கா. விசாலாட்சி | வ.தேனப்பனின் எழுத்துச்சூழலும், எழுத்தாளுமையும் | 313-320 |
| 50. | இரா.முத்துக்கருப்பன் | இயற்கை வாழ்வில் இக்கால இலக்கியம் | 321-324 |

Published by : **Raja Publications**, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House**, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

Scanned with CamScanner